அ.தி.மு.க. – பா.ஜ.க. கூட்டணி அமலாக்கத்துறையை ஏவிவிட்டு தினசரி நடத்தும்

# அவதூறுப் பிரச்சாரத்தை சட்டப்படி எதிர்கொள்வேன்!

## அமைச்சர் கே.என்.நேரு அறிக்கை!

சென்னை, டிச.10 –

**எனது துறையின் சாதனைகளை மறைத்து “அதிமுக பா.ஜ.க” கூட்டணி அமலாக்கத்துறையை ஏவி விட்டு நடத்தும் “நாளொரு புகார்” “பொழுதொரு அவதூறுப் பிரச்சாரத்தை” சட்டப்படி எதிர்கொள்வேன் என நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர்கே.என்நேரு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.**

அமைச்சர் கே.என்.நேரு விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

ஒவ்வொரு துறையிலும் திராவிட மாடல் அரசின் சாதனைகளை பொறுத்துக் கொள்ள முடியாத எதிர்க்கட்சிகளின் வரிசையில் அமலாக்கத்துறையையும் சேர்ந்து கொண்டு அதை ஒன்றிய பா.ஜ.க. அரசின் ஏவல் துறையாக்கி நாளொரு புகாரும், பொழுதொரு பிரச்சாரமுமாக என்னைக் குறி வைத்து தொடர்ந்து அவதூறில் ஈடுபட்டு வருவது மிகுந்த கண்டனத்திற்குரியது. கடந்த ஐந்து வருடங்களில் எனது துறையின் கீழ் 24 ஆயிரத்து 752 கிலோ மீட்டர் சாலைகள் போடப்பட்டுள்ளன. கிராமப்புற மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் 1 கோடியே 22 லட்சத்திற்கும் மேற்பட்டோருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. இன்னும் 77 லட்சத்து 28 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்களுக்கு பாதுகாப்புத் திட்டங்கள் வடிவமைக்கப்பட்டு பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

**எனது துறையின் சாதனைகள் எதிரிகளுக்கு கண்ணை உறுத்துகிறது!**

மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிகள் என இதுவரை 1762 பூங்காக்கள் அமைக்கப்பட்டுள்ளது அதில் ஒன்று சமீபத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட கோவை செம்மொழிப் பூங்கா! சென்னை என்றால் தொல்காப்பிய பூங்கா, கோவை என்றால் செம்மொழிப் பூங்கா என்பதோடு மக்கள் கண்டு களிக்க தங்களது பொழுது போக்கிற்கு ஏற்ற பூங்காக்களை திராவிட மாடல் அரசு போல் தமிழ்நாட்டில் அதிமுக அரசும் செய்யவில்லை. மற்ற மாநிலங்களில் உள்ள பா.ஜ.க. ஆளும் அரசுகளும் செய்யவில்லை. அதனால்தான் எனது துறையின் திராவிட மாடல் வளர்ச்சி எதிர்க்கட்சிகளின் கண்ணை உறுத்துவதை விட அமலாக்கத்துறையின் கண்களையும் உறுத்துகிறது.



பேருந்து நிலையங்கள் என்று எடுத்துக் கொண்டால் இதுவரை 158 பேருந்து நிலையங்கள் மாநிலம் முழுவதும் அமைக்கப்பட்டுள்ளது. மக்களின் அன்றாடப் பயணத்திற்கு மட்டுமல்ல அத்தியாவசியப் போக்குவரத்து தேவைக்கான அடிப்படை வசதிகளை உருவாக்குவதில் எனது துறை வரலாற்று சிறப்பு மிக்க சாதனைகளைச் செய்திருக்கிறது. மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலும் கடந்த ஐந்தாண்டுகளில் மாற்றும் அளவிற்கு வெள்ளத் தடுப்பு பணிகளை மேற்கொண்டிருக்கிறோம். சென்னையில் அதிமுக ஆட்சியில் சாலைகளும் சப்வேக்களும் ஒரு மழைக்கே வெள்ளக்காடாக காட்சியளித்ததை அனைவரும் அறிவர். ஆனால் இன்று சென்னையில் உள்ள சப்வேக்களில் தண்ணீர் தேங்காத நிலையை உருவாக்கியிருக்கிறோம்.

செம்பரம்பாக்கம் என்றாலே அதிமுக ஆட்சிதான் நினைவுக்கு வரும்! அந்த நிலையை மாற்றி எத்தகைய மழை வெள்ளத்திலும் எத்தனை முறை செம்பரம்பாக்கத்தில் தண்ணீர் திறந்தாலும் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்து இன்னலின்றி மழை வெள்ளத் துயரங்களில் இருந்து சென்னை மக்களை காப்பாற்றியிருக்கிறோம். அந்த வகையில் சென்னை மாநகராட்சியில் மட்டும் 1519 கிலோ மீட்டர் தொலைவிற்கு மழைநீர் கால்வாய் பணிகளை செய்துள்ள அரசு இந்த திராவிட மாடல் அரசு மட்டும்தான்.

**திராவிட மாடல் அரசின் மீது எரிச்சல் காட்டும் பா.ஜ.க.!**

இந்த சாதனைகளை பொறுத்துக் கொள்ள முடியாத - சட்டமன்றத் தேர்தலுக்கு புதிய அவதாரம் எடுத்துள்ள அதிமுக பா.ஜ.க. கூட்டணி கட்சியினரின் தூக்கத்தை இந்த அரசின் சாதனைகள் கலைத்து விட்டன. குறிப்பாக பா.ஜ.க.வினரை இந்த சாதனைகள் ரொம்பவே மிரட்டுகிறது. ஒன்றிய நிதியை முடக்குகிறோம். ஆளுநரை வைத்து முட்டுக்கட்டை போடுகிறோம். ஏஜென்ஸிகளை விட்டு பிரச்சாரம் செய்கிறோம். ஆனாலும் சாதனைகள் செய்கிறார்களே என்ற எரிச்சல்! எனவே எதன்னால் பித்தம் தெளியும் என திண்டாடுகிறார்கள். ஆகவே அமலாக்கத் துறை போன்ற ஏஜென்ஸிகளை ஏவி விடுகிறார்கள். ஒன்றிய பா.ஜ.க. அரசு செய்ய வேண்டிய அரசியல் பிரச்சாரத்தை அமலாக்கத்துறையையே வைத்து செய்கிறார்கள். தன்னாட்சி மிக்க அமைப்பு என உருவாக்கப்பட்ட அமலாக்கத்துறை இன்று பா.ஜ.க.வின் துணை அமைப்பாக்கப்பட்டிருக்கிறது.

என் சகோதரர் மீது 2013ல் வாங்கிய கடனை வைத்து போடப்பட்ட வழக்கை உயர்நீதிமன்றம் “எந்த குற்றமும் நடக்கவில்லை” என ரத்து செய்து விட்டது. அதன் அடிப்படையில் அமலாக்கத்துறை பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையை ஏற்கனவே உயர்நீதிமன்றத்தின் டிவிஷன் பெஞ்சும் ரத்து செய்து விட்டது. ஆனாலும் அமலாக்கத் துறையை மீண்டும் மீண்டும் பிரச்சாரத்தில் ஈடுபடச் சொல்லி ஒன்றிய பா.ஜ.க. அரசு நிர்ப்பந்திக்கிறது என்றால் அவர்களுக்குப் பயம் நானல்ல! இந்த துறை செய்துள்ள சாதனைகள்!

**அரசின் சாதனைகளை மக்கள் பாராட்டுகிறார்கள்!**

எனது துறைக்குள் எங்கு நுழைந்து பார்த்தாலும் எங்கும் “சாதனை சாதனை சாதனை” என்றுதான் எதிரொலிக்கும். ஆனால் அதுவே ஒன்றிய பா.ஜ.க. அரசு தூண்டிவிடும் அமலாக்கத்துறையின் கண்களுக்கு ஆதாரமற்ற புகார்களாகத் தெரிகிறது! அப்பட்டமான அரசியல் செய்யத் தூண்டி விடப்படுகிறது.

மக்கள் போற்றும் எனது துறையின் சாதனைகளைப் பார்த்து வெதும்புவர்களுக்கு பதில் சொல்ல முடியாது. ஆனால் ஒன்று மட்டும் நான் தெளிவாகக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். எனது நகராட்சிகள் மற்றும் குடிநீர் வழங்குதல் நிர்வாகத்துறையைப் பொறுத்தமட்டில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் மக்களுக்கு வழங்குதல், மழை நீர் வடிகால் பணிகளை நிறைவேற்றுதல், தலை சிறந்த பூங்காக்களை அமைத்தல் ஆகியவையே முதன்மையான பணிகள்! முழுமையான சாதனைகள்! மற்றபடி என் மீது சொல்லப்படும் குற்றச்சாட்டுகளை சட்டப்படி எதிர்கொள்வேன் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**அவதூறுப் பிரச்சாரத்துக்கு நாங்கள் அஞ்சமாட்டோம்!**

மக்கள் பணியாற்ற வந்துள்ள நாங்கள் ஒன்றிய பா.ஜ.க. அரசின் தூண்டுதலில் அரசியல் பிரச்சாரத்தில் ஈடுபடும் அமலாக்கத்துறைக்கோ அல்லது “அதிமுக பா.ஜ.க.” கூட்டணியினர் “பொய்யையும், புரட்டையும்” மட்டுமே மூலதனமாக வைத்து ஈடுபடும் அவதூறுப் பிரச்சாரத்திற்கோ அஞ்சமாட்டோம்!

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்துள்ளார்.

---

காயாம்பு தலைமை! திருவெறும்பூர் துவாக்குடி நகரக் கழகம் சார்பில்

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் பொதுக்கூட்டம்!

## அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யா மொழி – தமிழன் பிரசன்னா சிறப்புரை!

திருச்சி, டிச. 10 –

திருவெறும்பூர் அருகே உள்ள துவாக்குடி நகர திமுக சார்பில் தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினின் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் அண்ணா வளைவில் நடந்தது.

கூட்டத்திற்கு நகர செயலாளரும் நகர் மன்ற தலைவருமான காயாம்பு தலைமை வைத்தார்.

தமிழக பள்ளிகளுக்கு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யா மொழி தி.மு.க. செய்தி தொடர்பு இணை செயலாளர் தமிழன் பிரசன்னா ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டனர்.




தமிழக பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேசியதாவது:

தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினின் 48வது பிறந்த நாள் விழாவை திருச்சி தெற்கு மாவட்டத்தின் சார்பாக திருவெறும்பூர் தொகுதி, திருச்சி கிழக்கு, மணப்பாறை சட்டமன்த் தொகுதி என்று பரவலாக ஒரு 48 நிகழ்ச்சிகளை நாம் நடத்த வேண்டும் என்று நாங்கள் ஆசைப்பட்டோம்.

இன்றைக்கு அதை ஏற்று நம்முடைய ஒன்றிய, நகர, பகுதி செயலாளர் அனைவரும் மிகவும் சிறப்பான முறையிலே அந்த ஏற்பாடுகளை இன்றைக்கு செய்து கொண்டிருக்கின்றார்கள் அதன் ஒரு பகுதி யாகத்தான் துவாக்குடி நகர செயலாளர் நகர மன்ற தலைவருமான காயம்பு தலைமையில் இந்த கூட்டம் நடைபெறுகிறது.

ஏதோ ஒரு தனி மனிதனை பாராட்டுவதற்காக போற்றுவதற்காக நடைபெறுகின்ற கூட்டம் அல்ல. ஒரு தலைவனை நாம் பாராட்டுகின்றோம் போற்றுகிறோம் என்று சொன்னால் இன்றைக்கு ஒரு இயக்கத்தினுடைய இளைஞரணி செயலாளராக பணியாற்றுகிறார் என்று சொல்லும் போது இயக்கத்திற்கு வலுவை எப்படி சேர்க்கிறார் ஒரு நாட்டின் துணை முதல்வர் அமைச்சராக எப்படி பணியாற்றுகிறார் என்று சொன்னால் அந்த நிர்வாக திறமையின் மூலமாக அதை எப்படி சரியாக பணியாற்றுகிறார் கொள்கையை உயர்த்திப் பிடிக்கும் பொழுது கொள்கை எதிரிகளுக்கு சிம்ம சொப்பனமாக இருக்கும் போது திராவிடத்தின் தலைவராக தன்னை எப்படி நிலைநாட்டிக் கொள்கிறார் இந்த மூன்றும் இருக்கக்கூடிய ஒரு தலைவனை தான் இன்றைக்கு நாம் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.

அந்த ஒரு மனிதன் நன்றாக வாழ்ந்தார் என்று சொன்னால் ஒட்டுமொத்தமாக தமிழ்நாட்டில் இருக்கின்ற ஏழை எளிய மக்களும் நன்றாக வாழ்வார்கள் என்பதற்காக அவரை வாழ்த்துவதற்காகதான் இன்னைக்கு நம் அனைவரும் இன்றைக்கு நாம் ஒன்று கூடி இருக்கின்றோம்.

குறிப்பாக இன்றைக்கு தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் 1989ல அவர் ஒரு எம்.எல்.ஏ.வாக சட்டமன்றத்துக்குள்ளே நுழைகிறார் உள்ளே நுழையும்போது ஒரு தீர்மானத்தை கொண்டு வர வேண்டும் என்று ஆசைப்பட என்ன தீர்மானம் என்று சொன்னால் படிக்கின்ற பிள்ளைகளெல்லாம் பஸ்ல போகும் போது இலவச பஸ் பாஸ் இருந்தால் தான் நல்லா இருக்கும் என கூறினார் அதற்கு கலைஞர் மகனே சொன்னாலும் அதற்கு உரிய மானியம் இருந்தால் தான் பணம் இருந்தால் அந்த திட்டத்தை செயல்படுத்த முடியும் என்று பேசுகிறார்.

இன்றைய முதல்வர் அன்று எம்எல்ஏவாக இருந்த பொழுது எல்லா கட்சித் தலைவர்களையும் சந்தித்து நீங்களும் குரல் தரவேண்டும் அப்போதுதான் நிறைவேற்ற முடியும் முதலமைச்சர் கலைஞரிடம் சம்மதம் பெற்று விடலாம் என கூறுகிறார்.

அதற்கு மற்ற கட்சியினர் ஆமோதித்தனர்.

அந்த இலவச பஸ் பாஸ்ஸில் சென்ற மாணவனில் நானும் ஒருவன் என்பதில் சொல்லிக்கொள்ள பெருமைப்படுகிறேன்.

இலவச பஸ் பாஸ் கொடுத்த முதல்வர் இன்று மகளிருக்கு விடியல் பயணம் என்ற பெயரில் தாய்மார்கள் கட்டணம் இல்லாமல் பயணம் செய்யலாம் என்ற திட்டத்தை கொண்டு வந்தார்.

திருவெறும்பூர் தொகுதியில் பள்ளிக்குச் செல்லும் மாணவ, மாணவி களுக்காக தனியாக பேருந்து 5 இடங்களில் இருந்து தமிழக போக்குவரத்து துறை அமைச்சர் சிவசங்கர் நேரில் வரவழைத்து மாணவர்கள் எந்த நேரத்துல பள்ளிக்கு சென்று வருகிறார்களோ அதற்கு பிள்ளைகளுக்கு மட்டும் தனியாக ஒரு ஸ்கூல் பஸ் விட்டுள்ளோம் பஸ் பாஸ் வழங்கியவர் தற்பொழுது தனியாக பஸ் வழங்கி உள்ளார்.

முதலமைச்சர் கொண்டு வருகின்ற ஒவ்வொரு திட்டத்திற்கும் அது அவருடைய கரத்தை வலுப்படுத்து கின்ற விதமாக ஒரு திட்டத்தை கொண்டு வந்துட்டோம். ஒரு நாள் மட்டும் மிகப்பெரிய நிகழ்ச்சி நடத்தி எல்லாரும் பாராட்டுனா அதோட முடிஞ்சிட கூடாது என்று நினைக்கக் கூடியவர் தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அதனை கண்காணித்த சரியான முறையில் சென்றடைகிறதா என பார்வையிட்டு அதன் நிறை குறைகளை அலசி ஆராய்ந்து செவ்வனே செயல் படுத்துபவர் துணை முதல்வர் . மதுரையில் ரூ36 ஆயிரத்து 660 கோடி ரூப முதலீடு கொண்டு வந்துள்ளார்.

இதன் மூலம் பல ஆயிரக்கணக்கான நம் பிள்ளைகளுக்கு வேலை பெற்று தரப்போகிறார்.

இந்த 5 வருஷத்துல 13 லட்சம் கோடிக்கு மேல முதலீடு உள்ளே கொண்டு வந்திருக்கிறார். கிட்டத்தட்ட நேர்முகமாகவும் மறைமுகமாகவும் ஏறத்தாழ 34 லட்சம் இளைய சமுதாயத்தினுடைய வாழ்வாதாரம் மேம்படுத்தற்கு இன்றைக்கு இது போன்ற முதலீடுகளை கொண்டு வந்திருக்கிறார் என்று ஆய்வு அறிக்கையை சொல்லுகிறது.

பள்ளிக்கல்வித்துறை அமைச்சராக பள்ளி மாணவர் சார்ந்த மட்டும் தான் சொல்றேன் ஒன்றியத்தில் இருக்கின்ற பாரதிய ஜனதா அரசு என்ன செய்கிறது குறிப்பாக நம்முடைய பள்ளிகல்வி துறையில் நம்முடைய பிள்ளைகள் படிப்பிற்கு கடந்த இரண்டு ஆண்டுகளாக வழங்க வேண்டிய 3548 கோடி ரூபாய் கொடுக்காமல் நிறுத்தி வைத்திருக்கிறார்கள். முன்மொழி கொள்கையை ஆதரித்து கையெழுத்து போட்டால் தான் தருவேன் என கூறுகின்றனர்.

உதாரணத்துக்கு ஆங்கிலம் தமிழ் படிக்கும் பொழுது சமஸ்கிருதமும் படித்து அதிலும் நீ பால் செய்தால்தான் பாஸ் இல்லை என்றால் பெயில்இதனால் மாணவர்களுக்கு அச்ச உணர்வு ஏற்படும் எங்களுக்கு தமிழும் ஆங்கிலமும் மட்டுமே போதும்இத வைத்து உலக அளவில் போய் சாதனை செய்து வருகின்றனர் என்று நான் கூறினால் அதை அவர்கள் ஏற்றுக்கொள்ள முடியாது நீங்கள் கையெழுத்து போட்டாச்பணம் தருகிறோம் இல்லை என்றால் உங்களது 40 லட்சம் குழந்தைகள் படித்தால் என்ன படிக்காமல் போனால் எங்களுக்கு என்ன என்று கூறுகின்றனர்.

இந்த பணத்தின் மூலம் 32 ஆயிரம் ஆசிரியர் பெருமக்களுக்கு வழங்க வேண்டிய சம்பளமும் வழங்க முடியாதது.என்று பிளாக்மெயில் செய்கிறது இதை பார்த்ததா தமிழக முதல்வர்உனது கொள்கையை ஒத்துக்கொண்டு 3500 கோடி ரூபாய் இல்ல பத்தாயிரம் கோடிகொடுத்தாலும் அது எங்களுக்கு தேவையில்லை.

என் பிள்ளையை நான் படிக்க வச்சிக்கிறேன் என்று நம்ம தமிழ்நாட்டோட முதலமைச்சர் சொல்லிகிறார்.

எதில் அரசியல் செய்ய வேண்டும் என்பது கூட தெரியாத அளவுக்கு ஒன்றிய அரசு உள்ளது.

தமிழகத்தில் உள்ள எதிர்க்கட்சி யானஅதிமுகவும் அவர்களுக்கு ஒத்துப் போகிறது.

மிகப்பெரிய ஒரு வேதனை தரக்கூடியதாக இதற்கு நான் பதிவு செய்கிறேன் குறிப்பாக இந்த 2026 ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் இப்போ ஒன்றிய அரசு போயிட்டாங்க அப்படிங்கிறாங்க பொதுவா இந்த ஒன்றிய பட்ஜெட் வரும் போது என்ன பண்ணுவாங்கன்னா அதற்கான அமைச்சர் நிர்மலா சீதாரா மன் என்ன பண்ணுவாங்கன்னா ஒரு மிகப்பெரிய ஒரு அல்வா கிண்டுவாங்க இது நான் விளையாட்டு க்காகசொல்லவில்லை உண்மையிலே இது நடக்கும்.

அல்வாவை கிண்டு எல்லாத்தையும் கொடுப்பாங்க அதாவது பட்ஜெட் ரெடி ஆயிடுச்சு நான் தாக்கல் செய்யப்போகிறேன் பட்ஜெட் நல்ல வந்திருக்கு என்று சொல்வார்கள் 2025ல இதே மாதிரி பட்ஜெட் தாக்கல் பண்ணும் போது அந்த பட்ஜெட் புக்கில ஒரு இடத்துல கூட தமிழ்நாடு என்கின்ற பெயரை இல்லை என்று சொன்னால் எந்த அளவுக்கு புறக்க ணிக்கப்பட்டி ருக்கின்றோம் பொருளாதார அளவில் ஒரு ஆய்வு அறிக்கை வருகிறது என்று சொன்னால் உயர்கல்வி நிறுவனங்கள் தரவரிசை பட்டியல் என்று சொன்னால் நிதி ஆயோக் என்கிற விதத்தில் நம்ப மாட்டீங்க மூணுத்துலயும் பாத்தீங்கன்னா தமிழ்நாடு தான் நம்பர் ஒன்றாக இருக்கிறதுஎன்று சொல்வது ஒன்றிய அரசுதான் ஒரு பக்கம் நம்மை ஒன்றிய அரசு பாராட்டினாலும் மறுபக்கம் நமக்கு உரிய நிதியை வழங்க மறுக்கிறது

நாம்கொடுக்கும் வரிப்பணத்த எங்களுக்கு கொடுங்க நம்ம கேக்குறோம். ஆனா நமக்கு தரமாட்டேன் என்று சொல்லி ராஜஸ்தான் மாநிலத்திற்கும், உத்தரபிரதேசத்திற்கும், மத்திய பிரதேசத்தின் பிரிச்சு கொடுக்கிறாங்க நம்ம வரி பணத்தை அவங்க மக்கள்வளர்ச்சிக்கு கொடுக்கின்றனர்.

தமிழ்நாட்டோட முதலமைச்சர் நம்முடைய முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் தொடர்ந்து அதை நீதிமன்றத்தின் மூலமாக சரி தன்னுடைய நிர்வாக திறமை மூலமாக நம்முடைய தமிழ்நாட்டு மக்களை வாழவைத்துக் கொண்டிருக்கின்றார் இவ்வளவு நிதி நெருக்கடி இருந்தாலும் நமக்கான பல்வேறு திட்டங்களை தொடர்ந்து கொண்டு வந்து கொண்டிருப்பவர் தான் தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர்

2026 ஆம் ஆண்டிற்கு உரிய அல்வாக்கின் ஆரம்பித்து விட்டனர் அதில் தமிழ்நாட்டிற்கு என்ன இருக்கிறது என்பதை நாம் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்

முதலமைச்சர் 40 எம்பி நம்மால் கொடுத்து இருப்பீங்க எல்லாம் சேர்ந்து அந்த 40 என்று அங்க பேசறதுக்கு அந்த வாய்ப்பு கொடுப்பதில்லை அதனால தொடர்ந்து அங்கே பேசிக் கொண்டு நம்முடைய பேசும்போது தயவுசெய்து தமிழ்நாட்டுக்கு திட்டத்தை கொண்டு வாங்க இந்த திட்டத்தை நிறுத்தாதீங்க எங்களுக்கான பணத்தை கொடுங்கள்என கேட்கும் பொழுது நமது எதிர்க்கட்சி அரசியல் எல்லாம் பார்த்துக் கொள்ளலாம் நமக்கு உரிய பணத்தை கொடுங்கள் அதுக்கப்புறம் கூட்டணி பத்தி மத்தது எல்லாம் பேசலாம் என்று சொல்லவேண்டியவர் கொடுக்காதீர்கள் அப்பொழுதுதான் அந்த மக்களுக்கு புத்தி வரும் என கூறுகிறார்.

நம்முடைய இனமே நம்முடைய கண்ணை குத்துதே என்கின்றது தான் வருத்தம் இது நமக்கெல்லாம் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது.

இவ்வளவு நிதி நெருக்கடி இருந்தது என்று சொன்னாலும் இங்கே அமர்ந்திருக்கின்ற நம்மள அண்ணன் காயம்புவர்கள் நான் எப்போதுமே சொல்றதுதான் இந்த தொகுதியை பொருத்தவரைக்கும் இந்த பகுதிக்கு ஒரு எம்எல்ஏன்னா அது அண்ணன் காயம்பு என்று தான் சொல்றேன்.

நகராட்சிக்கு மட்டும் நிறைவேற்றப்பட்டிருக்கின்ற ஒரு சிலது மட்டும் நான் சொல்றேன் சாலை அமைக்கும் பணி 6.18 கோடி மழை நீர் வடிகாலுடன் சாலை அமைக்கும் பணி 5.47 கோடிகுளங்கள் மேம்படுத்தும் பணி 2.75 கோடி குடிநீர் வசதி 22.62கொடி பூங்கா அமைத்து புள்ளி இரண்டு மேம்படுத்தும் பணிகள் 1.22கோடி மழை நீர் வடிகால் அமைத்தல் மற்றும் சிறிய பாலப்பணிகள்1.27 கோடி கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் கழிவு நீர் உறிஞ்சி வாகனம்கொள்முதல் செய்தல் 9.15 கோடி

திடக்கழிவு மேலாண்மை பணிகள் மற்றும் குடிநீர் பணிகள் 2.82 கோடி பள்ளிக்கட்டிடம் கட்டுதல் மற்றும் சீரமைத்தல் 3.92 கோடி மருத்துவமனைக்கு கூடுதல் கட்டிடம் கட்டும் பணி 3.5 கோடி நவீன எரிவாயு தகடு மேடை அமைத்தல் 1.5 கோடி மேல்நிலைத் தேர்ந்தெடுக்க தொட்டி அமைத்தல் 1.7 கோடி இதோடு சேர்த்து நூலகம் அமைத்தல் மற்றும் சீரமைத்தல் சிறு உயர் மின் கோபுர விளக்கு அமைத்தல் அங்கன்வாடி மையம் கட்டுதல் நியாய விலை கடை கட்டிடம் கட்டுதல் பயணியர் நிழற்குடை அமைத்தல் முதலமைச்சரின் காலை உணவு திட்டத்திற்கான மைய சமையல் கூடம் அமைத்தல் என ஒட்டு மொத்தமாக இந்த துவாக்குடி நகராட்சிக்கு மட்டும் 64.11 கோடி மதிப்பிட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது

கடுமையான நிதி நெருக்கடி இருக்கும் பொழுதும் நம்மை நம்பி வாக்களித்த மக்கள் ஏமாந்து போய் விடகூடது நம்மால் என்ன செய்ய முடியுமோ அதில் எல்லாம் செய்து விட வேண்டும் இப்படி பல்வேறு விதமாக வரும் நிதியின் மூலம் நாம் பணிகளை மேற்கொண்டுள்ளோம் நாம் எல்லா பணிகளையும் செய்து விட்டோம் என்று கூற முடியாது இன்னும் நாம்செய்வோம்

இன்னும் செய்ய வேண்டிய அதிகம் இருக்கின்றது. அதையும் சேர்த்து செய்வதற்கு நாங்கள் காத்துக் கொண்டிருக்கிறோம் என்பதை மட்டும் இந்த நேரத்தில் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கின்றேன். ஆக வருகை தந்திருக்கின்ற தாய்மார்கள் 2026ல் நம்முடைய நான்கு தமிழ்நாடு முதலமைச்சர் கொண்டு வருகின்ற ஒவ்வொரு திட்டத்திற்கும் அவருடைய கரத்தில் நீங்கள் வலுப்படுத்திட வேண்டும் ஏற்கனவே நம்முடைய மகளிர் தொகை கிட்டத்தட்ட ஒரு கோடியே 15 லட்சம் குடும்பம் இன்னைக்கு தொடர்ந்து செப்டம்பர் மாதம் 2023 இருந்து இப்ப வரைக்கும் ஏறத்தாழ 27 மாதங்கள் தொடர்ந்து நாம் வாங்கிட்டு இருக்கோம் நாங்க அதுல விடுபட்டு போனவர்களுக்கும் நம்முடைய மாண்புகள் துணை முதலமைச்சர் அவருடைய துறை சார்ந்த அவர் தான் அந்த திட்டத்தையும் கண்காணிக்க கூடிய ஒரு துணை முதலமைச்சர்கூறியுள்ளார் இந்த மகளிர் உரிமைத்தொகை யார் யாருக்கெல்லாம் விடுபட்டு இருக்கின்றதோ தகுதி உடையவர்களுக்கு இந்த டிசம்பர் மாதத்தில் இருந்து வரும் என்று சொல்லி இருக்கிறார் அப்படிப்பட்ட துணை முதலமைச்சர் பல்லாண்டு காலம் வாழ்க வாழ்க என்று உங்களோடு சேர்ந்து நானும் வாழ்த்துகிறேன் என்றார்.

இந்த கூட்டத்தில் திமுக கட்சி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர் .




சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் அவசர செயற்குழுக் கூட்டம் வாழப்பாடியில் உள்ள தளபதி மு.க.ஸ்டாலின் அறிவாலயம் கலைஞர் அரங்கில் கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி., தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கருணாநிதி, சுரேஷ்குமார், சின்னதுரை, மாவட்ட பொருளாளர் ஸ்ரீராம், ஏ.ஏ.ஆறுமுகம், சந்திரமோகன், சோமசுந்தரம், சங்கர், வெண்ணிலா சேகர், மாணிக்கம், உமாசங்கர், சதீஷ்குமார், விஜயகுமார், ரத்தினவேல், ராஜேந்திரன், சக்கரவர்த்தி, மாதேஸ்வரன், மூர்த்தி, மருதமுத்து, சிவராமன், டாக்டர் .செழியன், வரதராஜன், மணி, அழகு வேல், பாலமுருகன், சித்தார்த்தன், நகர செயலாளர்கள் வேல்முருகன், பாலசுப்பிரமணியம், ராமச்சந்திரன், மற்றும் சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் அவர்கள், சென்னை, கோட்டூர்புரம், அண்ணா நூற்றாண்டு நூலகம் அரங்கில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில் முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம், கல்வி, சுயதொழில் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கியதை தொடர்ந்து, அரியலூர் மாவட்டம். ஜெயங்கொண்டம் சுபம் திருமண மண்டபத்தில் போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பயனாளிகளுக்கு முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம், கல்வி, சுயதொழில் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ. இரத்தினசாமி. ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் மற்றும் பலர் உள்ளனர்.